


கடலூர் நாடாளுமன்றத் தொகுதி, 'இந்தியா' கூட்டணி, காங்கிரஸ் கட்சி வேட்பாளர் எம்.கே.விஷ்ணுபிரசாத் அறிமுக செயல் வீரர்கள் கூட்டம் நெய்வேலி சட்டமன்றத் தொகுதி சார்பில் காடாம்புலியூரில் நடைப்பெற்றது. சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ,தலைமை தாங்கினார். அமைச்சர் சி.வெ.கணேசன் வேட்பாளரை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றினார். தொகுதி பொறுப்பாளர் சுபாசந்திரசேகர், எம்.ஆர்.இராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ, தி.க.துரைசந்திரசேகரன், த.வா.க, திருமால்வளவன், ம.தி.மு.க, பிச்சை, வி.சி.க, பா.தாமரைச்செல்வன் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசினர்.கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதிமரக்காணம் பேரூராட்சியில் 'இந்தியா' கூட்டணி சார்பில் போட்டியிடும் விழுப்புரம் நாடாளுமன்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் துரை ரவிக்குமாரை ஆதரித்து சிறுபான்மையினர்நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் பானைசின்னத்திற்கு தீவிர வாக்குச் சேகரித்தார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொருளாளர் ரமணன்,மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், வி.சி.க. மாவட்ட செயலாளர் மலைச்சாமி உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை!

# கிருஷ்ணகிரியில் வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### தேர்தல் பொறுப்பாளர் வழக்கறிஞர் பார்.இளங்கோவன் சிறப்புரை!

கிருஷ்ணகிரி, ஏப். 2 -

கிருஷ்ணகிரியில் 'இந்தியா' கூட்டணி சார்பாக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் கிருஷ்ணகிரி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளராக போட்டியிட்டுள்ள கோபிநாத் அவர்களை வெறிப் பெறச் செய்வது தொடர்பான வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைப்பெற்றது.

ஆலோசனைக் கூட்டம் கிழக்கு மாவட்டச் செயலாளர் தே. மதியழகன் எம். எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

நாடாளுமன்றத் தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் பார். இளங்கோவன் கலந்து கொண்டு பேசும்பொழுது இந்தக் கூட்டத்தில் வருகின்ற நாடாளுமன்ற தொகுதியை மீண்டும் வெற்றி வாகை சூட வேண்டும் அதற்கான பணிகளில் தனிக் கவனம் செலுத்த வேண்டும்,

மத்திய அரசின் அவலங்களை கிராம மக்கள் ஒவ்வொருவரிடமும் கொண்டு சென்று 'இந்தியா' கூட்டணி கட்சி சார்பில் கை சின்னத்திற்கு அதிக வாக்குகள் சேகரிக்க வேண்டும்,

ஒவ்வொரு தொகுதிகளிலும் தனித்தனியாக குழுக்கள் உருவாக்கி களப்பணிகளில் தீவிரம் காட்ட வேண்டும்,

குறிப்பாக ஒவ்வொரு தொகுதியிலும் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தான் வேட்பாளர் என்பதை மனதில் வைத்து வெற்றிப் பெறச் செய்வது நமது கடமை என உணர்ந்து செயல்பட்டால் இன்னும் 20 நாள்களில் கிருஷ்ணகிரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் 'இந்தியா' கூட்டணி மிகப்பெரிய வெற்றிப் பெற்று இந்தியில் மிகப் பெரிய ஆட்சி மாற்றம் ஏற்படுவது உறுதி என தொகுதிப் பொறுப்பாளர் வழக்கறிஞர் பார். இளங்கோவன் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாநில தீர்மானக்குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய துணை செயலாளர்கள் டேம். வெங்கடேசன் , அரியப்பன் , சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் அன்பரசன் ,மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன் , பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பரிதா நவாப், செந்தில், கிருபாகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், அஸ்லாம், நாகராசன், கோதண்டன்,சித்ரா சந்திரசேகர், கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் நவாப் , ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன் தனசேகரன், மகேந்திரன், தேங்காய் சுப்பிரமணி, சாந்தமூர்த்தி, அறிஞர், ராஜேந்திரன், நரசிம்மன், குண.வசந்தரசு, எக்கூர் செல்வம் ரஜினி செல்வம், குமரேசன், பேரூர் கழக செயலாளர்கள் பாபு, தம்பிதுரை, வெங்கடப்பன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# ஹிட்லருக்கு ஏற்பட்ட கதிதான் பிரதமர் மோடிக்கு ஏற்படும்!

### மேல்மலையனூர் பிரச்சாரத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு !

செஞ்சி, ஏப்.1-

ஆரணி நாடாளுமன்றத் தொகுதியில் இந்தியா கூட்டணி தி.மு.க. சார்பில் தரணி வேந்தன்உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார். இவரை ஆதரித்துசிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான்செஞ்சி தொகுதி மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தி, பெருவளூர், சாத்தம்பாடி ,எய்யில், மேல் செவலம்பாடி, கோட்டப்பூண்டி, கப்பளாம்பாடி, தாழங்குணம், எதப்பட்டு, அவலூர்பேட்டை கோவில் புரையூர், நொச்சலூர், தாயனூர் மேல்மலையனூர் ஆகிய ஊராட்சிகளில் உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்.

தொடர்ந்த பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு கேட்டு முதலமைச்சரின் சாதனைகள் பட்டியலிட்ட அமைச்சர் செஞ்சி மஸ்தான் விவசாயிகளின் உயிரை பலி வாங்கியவர்பிரதமர் மோடி என்றும் விவசாயிகளின்நலனில் அக்கறை கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்து அவர்களுக்கு இலவச மின் திட்டத்தை வழங்கியது திராவிட மாடல் அரசு என்றும் ஏழை எளிய மக்களை வஞ்சிக்கும் மோடி அரசை அகற்ற வேண்டும் சர்வாதிகார ஆட்சி நடத்தும் பிரதமர் மோடிக்கு ஹிட்லருக்கு ஏற்பட்ட கதிதான் விரைவில் ஏற்படும்எனக் கூறிய அமைச்சர் செஞ்சி மஸ்தான் இந்தியாவை காப்பாற்ற இந்தியா கூட்டணி வெற்றி பெற செய்ய முதலமைச்சர் தலைமை தாங்குகிறார்.

இந்தியாவில் உள்ள எல்லோருடைய மனதிலும் ஸ்டாலின் குரல் ஒலிக்கிறது எனதெரிவித்த அவர் முதலமைச்சர் செய்த சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கிதிமுக வேட்பாளர் தரணி வேந்தனை வெற்றி பெற செய்ய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

முன்னதாக பெருவளூர், சாத்தாம் பாடி, மேல்செவலாம்பாடி, அவலூர் பேட்டை, கோவில் புரையூர், மேல்மலையனூர் உள்ளிட்ட ஊராட்சிகளில் வாக்கு சேகரிக்க சென்ற அமைச்சர் செஞ்சி மஸ்தான், வேட்பாளர் தரணி வேந்தனுக்கு பெண்கள் ஆரத்தி எடுத்துஆயிரக்கணக்கான பெண்கள் பங்கேற்று உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன், தி.மு.க. தலைமைக்காக தேர்தல் பொறுப்பாளர் அன்பழகன், மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர் செல்லி ராமசரவணன்,பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ். செஞ்சி தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மணிவண்ணன்ஒன்றிய நிர்வாகிகள் மன்ன ஏழுமலை, உதயகுமார், ஆறுமுகம், ஜெய்சங்கர், தமிழரசி பாண்டியன், சரவணன், ரேணு, கோபால கிருஷ்ணன், அர்ஷத்,செந்தில்குமார், ரகுராமன், காந்திமதி, தாகிரா வஹாப், வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர்கள் பெருமாள், சக்தி, கிருஷ்ணமூர்த்தி, செல்வி ரகுபதி, ராமமூர்த்தி, ஷாகிலா அர்ஷத்,யசோதா சந்திரகுப்தன், கலா நாராயணமூர்த்தி, விஜயகுமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் விஜயலட்சுமி ஜெயக்குமார், கந்தவேலு, சந்திரா வீராசாமி, வான்மதி உதயகுமார், சரவணன், ராமசாமி, செல்வம், ரமேஷ்,அன்னபூரணி மணி, லாவண்யா ராஜேஷ், வெங்கடேசன், நிர்வாகிகள் எஸ்.பி. சம்பத், தோப்பு சம்பத், இளைஞர் அணி மணிகண்டன், மாணவரணி ஆறுமுகம், பொறியாளர் அணி தலைவர் டிபி ஏழுமலை, ஐ.டி.நிர்வாகிகள் மணிவண்ணன், சதீஷ்,மேல்மலையனூர் கணேசன் உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டு வாக்கு சேகரித்தனர்.




பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் அருண்நேருவை ஆதரித்து, பெரம்பலூர் நகரத்தில் உள்ள 7,8,9,10,11 மற்றும் அரனாரை ஆகிய இடங்களில், மாநில மகளிர் அணி ஆலோசகர் வாசுகி ரமணன் தி.மு.க.அரசின் சாதனைகளை எடுத்துக் கூறியும், ஒன்றிய பா.ஜ.க.அரசு தமிழகத்திற்கு செய்து வரும் துரோகங்களைப் பட்டியலிட்டும் வாக்குகள் சேகரித்தார். இதில் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, தேர்தல் பிரச்சாரம்!

(திருத்தப்பட்டது)

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 02.04.2024 (செவ்வாய்க்கிழமை) | திருநெல்வேலி<br>தென்காசி |
| 04.04.2024(வியாழக் கிழமை) | மதுரை<br>தேனி |
| 08.04.2024 (திங்கட் கிழமை) | சென்னை தெற்கு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை-18.
29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா தேர்தல் பிரச்சாரம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி,

கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 06-04-2024 | கடலூர் |
| 07-04-2024 | விழுப்புரம் |
| 08-04-2024 | திருவண்ணாமலை |
| 09-04-2024 | ஆரணி |
| 10-04-2024 | வேலூர் |
| 11-04-2024 | அரக்கோணம் |
| 12-04-2024 | காஞ்சிபுரம் |
| 13-04-2024 | திருபெரும்புதூர் |
| 14-04-2024 | கிருஷ்ணகிரி |
| 15-04-2024 | தருமபுரி |
| 16-04-2024 | சேலம் |
| 17-04-2024 | கள்ளக்குறிச்சி |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் - 31.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



திருவாரூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் அலுவலகத்தை மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. திறந்துவைத்தார். அப்போது வேட்பாளர் வை.செல்வராஜ், எம். செல்வராஜ் எம்.பி., முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை. அசோகன், நகர்மன்ற தலைவர் புவனப்ரியா செந்தில், ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் தேவா, மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள் வேட்பாளர் வை.செல்வராஜ், நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழகச் சொற்பொழிவாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி தேர்தல் பிரச்சாரம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, கழக சொற்பொழிவாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்.

அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 06-04-2024 | திருவண்ணாமலை |
| 07-04-2024 | கிருஷ்ணகிரி |
| 08-04-2024 | தருமபுரி |
| 09-04-2024 | அரக்கோணம் |
| 10-04-2024 | காஞ்சிபுரம் |
| 11-04-2024 | திருபெரும்புதூர் |
| 12-04-2024 | வடசென்னை |
| 13-04-2024 | மத்திய சென்னை |
| 14-04-2024 | திருவள்ளூர் |
| 15-04-2024 | வேலூர் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 31.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ஊடகவியலாளர் செந்தில்வேல் தேர்தல் பிரச்சாரம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, ஊடகவியலாளர் செந்தில்வேல் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| 06.04.2024 | - | கோயம்புத்தூர் |
| 07.04.2024 | - | திருப்பூர் |
| 08.04.2024 | - | பொள்ளாச்சி |
| 09.04.2024 | - | நீலகிரி |
| 10.04.2024 | - | ஈரோடு |
| 11.04.2024 | - | கரூர் |
| 12.04.2024 | - | திருச்சி |
| 13.04.2024 | - | பெரம்பலூர் |
| 14.04.2024 | - | மயிலாடுதுறை |
| 15.04.2024 | - | தஞ்சாவூர் |
| 16.04.2024 | - | நாகப்பட்டினம் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் - 31.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.